அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2025
# தமிழ் - ஆண்டு 6

## புலன்மொழி வளத்தேர்வு — வாசித்தல்

செய்தித்தாள்கள் தொடக்க காலங்களில் செய்திகளை மட்டுமே தெரிவித்து வந்தன. கால வளர்ச்சியில் பலதுறைகள் பற்றிய அறிவையும் மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் வளர்ச்சியடைந்தன. உலக நடப்புகளை அறிவிப்பதுதான் செய்தித்தாள்களின் முதன்மையான குறிக்கோளாக இருந்தது. ஆனால் அறிவியல், இலக்கியம், அருங்கலைகள், ஆன்மீகம், விளையாட்டு, பொழுதுபோக்கு எனப் பல செய்திகளையும் தாங்கி வருகின்றன. இதனால் செய்தித்தாள்கள், பலவகையான செய்திகளை மக்களிடம் போய்ச் சேர வழிவகுக்கின்றன. இவ்வாறு எல்லா நாட்டுச் செய்தித்தாள்களும் கட்டுரை, கவிதை, நாடகம், ஆராய்ச்சி என்று பல வடிவங்களில் வெளியிடப்பட்டு மக்களின் வரவேற்பைப் பெறுகின்றன. அத்துடன் உரிய இலக்கியப் பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகின்றன.